# सप्तमः पटलः सप्तदशः खण्डः

दक्षिणाप्रत्यक् प्रवणमगारावकाशमुद्धत्य पालाशेन
शमीमयेन वोदूहेनैतामेव दिशमुत्तरयोदूहति। । १ ।
एवं त्रिः। । २ ।
क्लृप्तमुत्तरयाभिमृश्य प्रदक्षिणं स्थूणागर्तान् खानयित्वाऽभ्यन्तरं
पांसूनुदूप्योत्तराभ्यां दक्षिणाद्वारस्थूणमवदधाति। । ३ ।

## 7வது படலம் – 17வது கண்டம்

*1. தக்ஷிணாப்ரத்யக் ... ...திசமுத்தரயோதூஹதி*

வீடு கட்டுவதற்காக தென்மேற்கிலுள்ள பூமியைத் தேர்ந்தெடுக்கவேண்டும். பூமியைத் தோண்டி பின் பலாச அல்லது சமீ கொத்தால் வெட்டி எடுத்த தூசியை "யத்பூமே:" என்னும் மந்த்ரத்தால் பெருக்கி வடக்கில் அல்லது கிழக்கில் தள்ளவேண்டும்.

(174)குறிப்பு:- இந்தக் கர்மா க்ருஹ ஸம்பந்தமான கர்மாவென்று சொல்லப்படுகிறது. இந்த கர்மா எல்லா யாகங்களைப்போல் நித்யம் அல்ல. நைமித்திக கர்மாவிலும் அடங்காது. இது ஒரு காம்ய கர்மாவாகையால் இதை ஒருவன் செய்யவில்லை எனில் தோஷம் கிடையாது. ஒருக்கால் செய்யப்படுமாகில் उदगयन पूर्वपक्षाहः என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும் என்று ஹரதத்தர் அபிப்ராயம். இதை சிஷ்டர்கள் ஆதரிப்பதில்லை.

*2. ஏவம் த்ரி:*

உதூஹனத்தை மூன்றுமுறை செய்யவேண்டும். மூன்றுமுறையும் மந்த்ராவர்தியுடன் செய்யவேண்டும்.

*3. க்லுப்தமுத்தரயா ... ... ஸ்தூணமவததாதி*

இவ்வாறு தயார் செய்த பூமியை "ஸ்யோநா ப்ருத்வி" எனும் மந்த்ரத்தால் ஸ்பர்சிக்கவும். இடதிலிருந்து வலதுபுறத் தூண்களுக்கு குழி தோண்டவும். அம்மண்ணை வீடுகட்டவேண்டிய பூமியில் போடவும்.

(175)குறிப்பு:- மேலே சொல்லப்பட்ட விதியால் மண்ணை இழுத்து சதுரமாகவும்,

(174) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 136
(175) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 137

एवमितराम्। । ४ ।

यथास्वतमितरा अन्ववधाय वंशमाधीयमानमुत्तरेण यजुषाभिमन्त्रयते। । ५ ।

सम्मितमुत्तरैर्यथालिङ्गम्। । ६ ।

சமதலமாகவும் செய்யவேண்டும். தூண்களுக்காக பள்ளங்கள் வெளியிலிருந்து தோண்ட ஆரம்பிக்கவேண்டும். அதாவது முதலில் வாசல் தூண்களுக்காக. அதன் பின்னர் உள்பக்கத் தூண்களுக்காக பள்ளங்கள் தோண்டப்படுகின்றன.

*4. ஏவமிதராம்.*

இவ்விரு ருக்காலும் இடது பக்கம் வாசற்தூணை நடவும்.

*5. யதாஸ்தா... .....யஜுஷாபிமந்த்ரயதே*

வாசற் தூண்களை நட்டபிறகு மற்ற தூண்களையும் அதே வரிசையில் நடவேண்டும். தூண்களின் மீது மூங்கிலை வைத்து "ருதேநஸ்தூணௌ" என்று மந்த்ரம் சொல்லி அபிமந்த்ரணம்.

(176)குறிப்பு:- நடுவில் உள்ள தூண்களில் வேலைசெய்யும் மற்றவர்களால் மூங்கில்களை வைக்கும்பொழுது வீட்டு யஜமானன் ऋतेनस्थूणौ என்கிற யஜுஸால் அபிமந்த்ரணம் பண்ணவேண்டும்.

*6. ஸம்மிதமுத்தரைர்யதாலிங்கம்*

வீடு நிர்மாணம் செய்தபின் "ப்ரஹ்ம ச தே" முதலிய ஐந்து மந்த்ரங்களால் அந்தந்த வஸ்துக்களை அபிமந்த்ரணம் செய்யவேண்டும்.

(177)குறிப்பு:- ஹரதத்தர் ஆறு மந்த்ரங்களால் அபிமந்த்ரணம் செய்யவேண்டும் என்கிறார். ஸுதர்சனாசார்யரோ ஐந்து மந்த்ரங்கள் என்கிறார். இதற்குக் காரணம் धर्मस्ते स्थूणाराज श्रीस्ते स्तूपः என்பதலில் धर्मस्ते स्थूणाराज என்பதைத் தனியாகப் பிரிக்கிறார் ஹரதத்தர். ஆனால் ஸுதர்சனாசார்யர் இதை ஒரே மந்த்ரமாகக் கருதுகிறார். மேலும் சிலர் இரண்டாவது மந்த்ரம் ஆரம்பித்து மூன்று மந்த்ரங்களில் अभिरक्षतु என்று அநுஷங்கமாகச் சொல்லவேண்டும் என்கிறார்கள். (இங்கு மற்ற மந்த்ரங்களில் அநுஷங்கம் வராது. அநுஷங்கம் இரண்டுவிதம். ஒன்று முதல்

---

(176) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 138
(177) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 138

पालाशं शमीमयं वेध्ममादीप्योत्तरयर्चात्तरेण यजुषागारं
प्रपाद्योत्तरपूर्वदेशेऽगारस्योत्तरयाऽग्निं प्रतिष्ठापयति। । ७ ।

மந்த்ரத்திலும் கடைசி மந்த்ரத்திலும் அநுஷங்கம் சொல்லப்பட்டிருந்தாலும் அங்கு அநுஷங்கம் உண்டு. அல்லது முதலில் சொல்லப்படாமல் கடைசியில் சொல்லப்பட்டிருந்தாலும் உண்டு. முதலில் மட்டும் சொல்லப்பட்டு பிறகு சொல்லப்படவில்லையாகில் சொல்லக்கூடாது. ये देवाः पुरस्सदः கடைசியில் மட்டும் பாடமுள்ளது அங்கு அநுஷங்கம் ஸித்தம். ऋताषाट् அங்கு ஆரம்பத்திலும் கடைசியிலும் சொல்லப்படுவதால் அநுஷங்கம் ஸித்தம். இங்கு அப்படி இல்லையாதலால் அநுஷங்கம் கிடையாது)

**7.** *பாளாசம் ... .... ப்ரதிஷ்டாபயதி*

*சமீ அல்லது பலாச ஸமித்துகளை அக்னியில் சேர்த்து "உத்ரியமாண:" என்ற ருக் மூலமாக அக்னியை பாத்திரத்தில் எடுத்து, "இந்த்ரஸ்ய" என்பதால் வீட்டினுள் ப்ரவேசிக்கவேண்டும். வடகிழக்கில் "அம்ருதாஹுதிம்" என்பதால் அக்னி ப்ரதிஷ்டை.*

(178)குறிப்பு:- இந்த ஸூத்ரத்தில் க்ருஹப்ரவேச விதி சொல்லப்படுகிறது. வேறுவிதமான வீட்டிலும் இதே ப்ரவேசத்தின் விதி சொல்லப்படுகிறது. சிலர் க்ருஹப்ரவேசத்திற்கு உதகயந விதியின் நியமத்தை எதிர்பார்க்கின்றனர். சிலர் இதை ஏற்றுக்கொள்வதில்லை. अगारस्याग्निं प्रतिष्ठापयति என்பதால் போஜனத்திற்காக என்று அபிப்ராயம். இதன் காரணத்தால் இந்த அக்னி ஔபாஸன அக்னியிலிருந்து எடுக்கப்படக்கூடாது எனச் சிலரும், ஔபாஸன அக்னிதான் எனச் சிலரும் கருதுகிறார்கள். ஏனென்றால் இதில் ஹோமம் செய்வதற்கு விதிசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஹோம கர்மாவானது சாப்பாடு சமைக்கும் அக்னியிலும், வைச்வதேவ ஹோமம்போல் நடக்கிறது. மனைவி முதலியவர்கள் எப்பொழுது ஔபாஸ ன அக்னி உள்ளே நுழைகிறதோ அப்பொழுதுதான் உள்ளே புகவேண்டும். ஹரதத்த மிச்சரர் அநேக தர்கங்களுக்குப் பிறகு எந்த அக்னியை आगारस्याग्निं என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அது ஸாதாரண போஜனம் செய்வதற்கு ஏற்பட்ட அக்னியென்று தீர்மானமாகச் சொல்லுகிறார். ஆனால் ஸுதர்சனாசார்யர்

(178) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 139

तस्माद्दक्षिणमुदधानायतनं भवति। । ८ ।

तस्मिन्विषूचीनाग्रान् दर्भान् संस्तीर्य तेषूत्तरया व्रीहियवान् न्युप्य

तत्रोदधानं प्रतिष्ठापयति। । ९ ।

तस्मिन्नुत्तरेण यजुषा चतुर उपकुम्भानानयति। । १० ।

दीर्णमुत्तरयानुमन्त्रयते। । ११ ।

ச்ரௌதாக்னியையும் கூட இந்த ஸமயத்தில் விதிப்படி புதிய வீட்டில் ஆதானம் செய்யவேண்டும் என்கிறார். ஏனென்றால், சிஷ்டர்களால் இந்த கர்மா ராத்ரியில் செய்யப்படுகிறது. ஹரதத்தருடைய மதத்திற்கு ஸுதர்சனாசார்யர் आगारस्य அக்னியை ஔபாஸனாக்னிதான் என்று ஸாதிக்கிறார். आगाराग्निः, शालाग्निः, गृह्याग्निः, औपासनाग्निरित्येकार्थ तया याज्ञिकानां प्रयोगात् औपासन एव प्रतिष्ठाप्यः, न पचनाग्निः। என்று.

*8. தஸ்மாத்தக்ஷி.... ....பவதி*

ப்ரதிஷ்டை செய்த அக்னிக்குத் தெற்கில் ஜலம் நிறைந்த கும்பம் வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். उदकं धीयते यत्र तत् उदधानं मणिकाख्यम्।

*9. தஸ்மிந் .. ...ப்ரதிஷ்டாபயதி*

தர்பத்தின் நுனிகள் எல்லாத்திசைகளிலும் இருக்கும்படி தர்பங்களைப் பரப்பவேண்டும். அதன்மீது யவம் முதலிய தான்யங்களை பரப்பி அதன்மீது கும்பம் வைக்கவேண்டும்.

அப்போது अन्नपतेन्नस्य மந்த்ரத்தைச் சொல்லவேண்டும்.

*10. தஸ்மிந்நுத்தரேண ... ...உபகும்பாநாநயதி*

அடுத்து "அரிஷ்டா" என்பதைச் சொல்லி ப்ரதான கும்பத்திற்கு நாலுபக்கமும் வைத்துள்ள கும்பங்களின் ஜலத்தை மத்திய கும்பத்தில் சேர்க்கவேண்டும்.

(179)குறிப்பு:- ஒவ்வொரு கலசம் வைக்கும்பொழுதும் மந்த்ராவர்த்தி செய்யப்படும். ஆனால் மதுபர்க்க ப்ராசன விதியைப்போல இங்கேயும் மந்த்ரோச்சாரணம் ஒரே ஒருமுறை மட்டும்தான் என்று ஸுதர்சனாசார்யர் அபிப்ராயம்.

*11. தீர்ணமுத்தரயாநுமந்த்ரயதே*

ஒருக்கால் கும்பம் உடைந்துவிட்டால் "பூமிர்பூமிம்" என்ற மந்த்ரம் சொல்லவும்.

---

(179) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 141

अग्नेरुपसमाधानाद्याज्यभागान्तेऽन्वारब्धायामुत्तरा आहुतीर्हुत्वा

जयादि प्रतिपद्यते। । १२ ।

परिषेचनान्तं कृत्वोत्तरेण यजुषा उदकुम्भेन त्रिः

प्रदक्षिणमन्तरतोऽगारं निवेशनं वा परिषिच्य ब्राह्मणान्

भोजयेदपूपैस्सक्तुभिरोदनेनेति। । १३ ।

*12. அக்நேருபஸமாதாய .... ....ஆஹுதீர்ஹுத்வா ஜயாதிப்ரதிபத்யதே*

ஆஜ்யபாகம் வரை செய்து "வாஸ்தோஷ்பதே" நான்கு ப்ரதான ஹோமம். பின் ஜயாதி ஹோமங்கள்.

(180)குறிப்பு:- மறுபடியும் இந்த ஸூத்ரத்தின் வ்யாக்யானத்தில் இந்த கர்மாவில் உபயோகிக்கப்பட்ட அக்னியை पचनाग्नि என்று சொல்லியிருக்கிறார். ஜயாதி முதலிய ஆஹுதிகளை விதித்து, ஸ்தாலீபாகம் நிஷேதம் செய்யப்பட்டுள்ளது. ஸ்விஷ்டக்ருத் ஆஹுதி இங்கு விதிக்கப்படவில்லை. ஆனால் ஸுதர்சனாசார்யரோ இந்த கர்மாவில் உபயோகத்தில் (प्रयोग) கொண்டுவரப்படுகிற அக்னி ஔபாஸன அக்னியேதான் என்று தனது கருத்தில் உறுதியாக இருக்கிறார். இது ஸம்பந்தமாக அவர் யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியை உதாஹரித்திருக்கிறார்.

*13. பரிஷேசநாந்தம் .... ... நேநேதி*

பரிஷேசநம் வரை செய்து மத்யத்தில் உள்ள கும்பத்திலிருந்து வீட்டின் நாலா பக்கமும் "சிவகும்சிவம்" என்று ஸந்தத தாரையாகத் தெளிக்கவேண்டும்.

(181)குறிப்பு:- முழு கர்மாவும் முடிந்தபிறகு வீட்டைப் பரிஷேசனம் செய்யப்படுகிறது. வைச்வதேவ கர்மாவில் செய்யப்படுகிற பரிஷேசனம் போல் இங்கு பரிஷேசனம் செய்யப்படாது. பரிஷேசனமும் ஒரே முறை எடுக்கப்பட்ட தீர்த்த குடத்திலிருந்து ஜலத்தை அவிச்சின்னமாகச் சேர்க்கவேண்டும். अन्तरतः என்கிற சப்தத்தால் வீட்டிற்கு வெளியே பரிஷேசனம் என்பது ஸித்தமாகிறது. உள்ளேயும் பரிஷேசனம் உண்டு. இரட்டைப்படையில் ப்ராம்மணர்களுக்கு போஜனம் செய்விக்கவேண்டும். ஸத்துமாவின் உபயோகம், போஜனத்திற்கு முன்பே உபயோகம் ஆகிறது. நடுவில் உபயோக ப்ரஸக்தி இல்லை என்று இரு வ்யாக்யாதாக்களும் கருதுகிறார்கள். மூன்று முறை ப்ரதக்ஷிணம் உண்டு.

(180) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 141
(181) "ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்" – பக்கம் – 142